**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செங்கோட்டை**

**முன்னிலை – திரு.கே.என்.குரு, பி.ஏ. பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, செங்கோட்டை

2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 06 ஆம் நாள் சனிக்கிழமை

**அசல் வழக்கு எண்.20/2025**

**(CNR.No.TNTS11-000545-2025)**

1. சுப்புலெட்சுமி
2. ஜெயகுமாரி
3. சிவா
4. விக்னேஷ் ராம் ... வாதிகள்

/ எதிர் /

1. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம்,
செங்கோட்டை
2. தமிழ்நாடு அரசு அதன் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,
தென்காசி.

... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, இந்நீதிமன்றத்தின் முன்னர் 01.06.2026 தேதியன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.புகழ்வேந்தன், அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.ரகுமான் சாதத், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டறிந்தும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது, 03.10.2023 அன்று இறந்துபோன ஐயப்பன் என்பவரின் சட்டப்பூர்வ வாரிசுகள் 1 முதல் 4 வாதிகள் தான் என விளம்புகை செய்தும்; அதன் அடிப்படையில் வாரிசுச் சான்றிதழ் வழங்கிட 1–ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பிறப்பித்தும்; வழக்கின் செலவுத் தொகையை 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகளிடமிருந்து வாதிகளுக்குப் பெற்றுத் தர வேண்டியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>வழக்குரையின் சுருக்கம்</u>** :–

1–ம் வாதியின் கணவரான ஐயப்பன், சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பாக சுடலி என்பவரை திருமணம் செய்திருந்தார். மேற்படி திருமணத்தின் பயனாய் அவர்களுக்கு குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை. இந்நிலையில், ஐயப்பனின் பெற்றோர் குமாரவேல் மற்றும் கற்பம்மாள் ஆகியோர் ஏற்கனவே இறந்துவிட்டனர். அதன் பிறகு, சுமார் 24 வருடங்களுக்கு முன்பு ஐயப்பன் 1–ம் வாதியை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார். இத்திருமணத்தின் வாயிலாக 2 முதல் 4–ம் வாதிகள் பிறந்தனர். இதற்கிடையில் ஐயப்பனின் முதல் மனைவியான சுடலி என்பவர், ஐயப்பனை மட்டும் தனது சட்டப்பூர்வ வாரிசாக விட்டுவிட்டு கடந்த 31.07.2022 அன்று காலமானார். அதனைத் தொடர்ந்து, 1–ம் வாதியின் கணவர் ஐயப்பனும் கடந்த 03.10.2023 அன்று 1 முதல் 4 வாதிகளை மட்டும் தன் சட்டப்பூர்வ வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகி விட்டார். இறந்துபோன ஐயப்பனுக்கு சுயார்ஜிதமாக ஸ்தாவர, ஜங்கம சொத்துக்கள் இருந்து வருகிறது. லேட். ஐயப்பன் பெயரில் உள்ள பட்டாவை வாதிகளின் பெயருக்கு மாற்றம் செய்வதற்கு வாரிசு சான்றிதழ் அவசியமாய் இருக்கிறது. எனவே, 1–ம் வாதி வாரிசு சான்றிதழ் கோரி 1–ம் பிரதிவாதி அலுவலகத்தில் மனு கொடுத்தார். ஆனால், 1–ம் பிரதிவாதி லேட். ஐயப்பனுக்கு இரண்டு மனைவிகள் என்ற காரணத்தைக் காட்டி, நீதிமன்றம் மூலம் வாரிசு சான்று பெற்றுக் கொள்ள

அறிவுறுத்தி, கடந்த 16.11.2024 அன்று வாதிகளின் மனுவை நிராகரித்து மேலெழுத்து செய்தார். எனவே, வாதிகள் 1 முதல் 4 வரை உள்ள நபர்களே லேட். ஐயப்பனின் சட்டப்பூர்வ வாரிசுகள் என விளம்புகை செய்தும், அதன் அடிப்படையில் வாரிசு சான்றிதழ் வழங்கிட 1–ம் பிரதிவாதிக்கு உரிய செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>** :–

வாதிகளின் தாவா வழக்கு உண்மையில்லை. உண்மைகளை மறைத்து பொய்யான சங்கதிகளை கூறி வாதிகள் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். ஆகையால் இத்தவா வழக்கு விசாரணையின்றி உடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாய் உள்ளது. 1–ம் வாதியின் கணவரான ஐயப்பன் 30 வருடங்களுக்கு முன்பு சுடலி என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றும், அவர்களுக்கு குழந்தைகள் பிறக்கவில்லை என்றும், அதன் பிறகு 24 வருடங்களுக்கு முன்பு 1–ம் வாதியை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார் என்றும், அவர்களுக்கு 2 முதல் 4 வாதிகள் பிறந்தார்கள் என்றும் கூறுவது உண்மையல்ல. மேலும் ஐயப்பனின் பெற்றோர் ஏற்கனவே இறந்துவிட்டார்கள் என்றும், முதல் மனைவி சுடலி கடந்த 31.07.2022–ல் இறந்துவிட்டார் என்றும் கூறுவதும் உண்மையல்ல. அதை வாதிகளே சான்றாதாரங்களுடன் நீதிமன்றத்தில் நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவர். மேலும், ஐயப்பன் கடந்த 03.10.2023 அன்று வாதிகளை மட்டும் வாரிசாக விட்டு இறந்தார் என்பதும், அவருக்கு சுயார்ஜித சொத்துக்கள் உள்ளன என்பதும், பட்டா மாற்றம் செய்ய வாரிசு சான்றிதழ் அவசியம் என்பதும் உண்மையல்ல. 1–ம் பிரதிவாதி அலுவலகத்தால் வாதிகளின் மனு 16.11.2024 அன்று நிராகரிக்கப்பட்டது என்றும், வாதிகள் தான் வாரிசுகள் என்றும் கூறுவது முற்றிலும் மறுக்கப்படுகிறது. இத்தாவா வழக்கிற்கு எவ்வித வழக்குமூலமும்

கிடையாது; சொல்லியுள்ள வழக்குமூலம் பொய்யானது ஆகும். எனவே, வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டியதாகும்.

**4.** இவ்வழக்கில் வாதிகளின் வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை மற்றும் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் எழுந்துள்ள பிரச்சனைகளுக்கு தீர்முடிவினை எட்ட வழக்கு விசாரணையின் பொருட்டு கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டது.

1. Whether the plaintiffs are enttield to the relief of the Declaration as the legal heirs of the deceased Iyyappan?
2. Whether the plaintiffs are enttield for the relief of the Mandatory Injunction direct in the 1st defendant to issue a legal heirs certificate?
3. To what other reliefs the parties are entitled to?

**5.** இவ்வழக்கில், வாதிகள் தரப்பில் வழக்கை நிரூபிக்கும்பொருட்டு, வா.சா.1 விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. <u>எழுவினா 1 முதல் 3 ற்கான தீர்வு :–</u>**

**i)** இவ்வழக்கில், இறந்துபோன ஐயப்பன் என்பவருக்கு வாதிகள் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் என வாதிகள் கூறுவது சரிதானா? என்பது குறித்து வழக்கில் உள்ள ஆவணங்களை பரிசீலிக்கும்போது, இறந்துபோன ஐயப்பன் என்பவரும் அவருடைய வாரிசாகக் கூறப்படும் இவ்வழக்கு வாதிகளும் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதை வழக்கு ஆவணங்கள் உறுதிப்படுத்துகிறது.

ஆதலால், மேற்படியார்களுக்கு இந்து வாரிசுரிமைச் சட்ட விதிமுறைகள் பொருந்தக்கூடியதாகும்.

**ii)** வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், லேட். ஐயப்பன் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு சுடலி என்ற பெண்ணைத் திருமணம் செய்திருந்தார் என்றும், அவர்களுக்குக் குழந்தைகள் ஏதும் இல்லாத நிலையில் முதல் மனைவி சுடலி கடந்த 31.07.2022 அன்று இறந்துவிட்டார் என்றும், அதற்கு முன்பே ஐயப்பனின் பெற்றோர்களான குமாரவேல் மற்றும் கற்பம்மாள் ஆகியோரும் இறந்துவிட்டனர் என்றும்; அதன் பின்னர் 24 வருடங்களுக்கு முன்பு லேட். ஐயப்பன் 1–ம் வாதியைத் திருமணம் செய்துகொண்டார் என்றும் இத்திருமணத்தின் மூலம் பிறந்த பிள்ளைகளான வாதிகள் 2 முதல் 4 ஆகியோருடன் லேட். ஐயப்பன் வாழ்ந்து வந்த நிலையில் கடந்த 03.10.2023 அன்று காலமாய்விட்டார் என்றும்; **1–**ம் பிரதிவாதியான வட்டாட்சியர் முறையான கள விசாரணை நடத்தாமல், இரண்டு மனைவிகள் என்ற காரணத்தைச் சொல்லி ஆன்லைன் மூலமாக வாரிசு சான்றிதழ் தர மறுத்து நிராகரித்தது சட்டப்படி தவறானது என்றும்; லேட். ஐயப்பன் பெயரில் உள்ள பட்டாவை பெயர் மாற்றம் செய்வதற்கும், சொத்துரிமை நிலவரங்களுக்கும் இந்தச் சான்றிதழ் மிகவும் அவசியமாக உள்ளதால், வாதிகள் அனைவருக்கும் வாரிசுச் சான்றிதழ் வழங்க பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்க வேண்டும் என வாதிட்டார்.

**iii)** 1, 2–ம் பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், லேட். ஐயப்பனின் முதல் மனைவி சுடலி கடந்த 31.07.2022 அன்று இறந்ததாக வாதிகளே கூறும் நிலையில், 1–ம் வாதியுடனான திருமணம் 24 வருடங்களுக்கு முன்பே (அதாவது முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே) நடந்துள்ளது என்பது வழக்குரை மூலமே தெளிவாகிறது என்றும்; இந்து சட்டப்படி இந்த இரண்டாவது திருமணம் செல்லாது என்பதால், 1–ம் வாதியோ அவரது

பிள்ளைகளோ லேட். ஐயப்பனின் சட்டப்படியான வாரிசுகள் ஆக முடியாது என்றும் மேலும், ஐயப்பனின் பெற்றோர் இறப்பு குறித்தோ, வாதிகள் தான் அவரின் வாரிசுகள் என்பது குறித்தோ வாதிகள் தரப்பில் எவ்வித நேரடிச் சான்றாவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும்; வாரிசு சான்றிதழ் பெற அரசு வகுத்துள்ள உரிய வழிமுறைகளைப் பின்பற்றாமல் நேரடியாக இந்த வழக்கைத் தாக்கல் செய்தது நடைமுறைக்கு மாறானது என்பதால், எவ்வித வழக்குமூலமும் இல்லாத இந்த வழக்கினைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

**iv)** இவ்வழக்கில் இறந்துபோன ஐயப்பன் என்பவருக்கு வாதிகள் மட்டுமே வாரிசுகள் என கண்டுள்ள வழக்குரை சங்கதிகளை அனுசரித்து இவ்வழக்கின் 1–ம் வாதி வா.சா.1 ஆகத் தன்னுடைய முதல் விசாரணை உறுதிக்கூற்றினைத் தாக்கல் செய்துள்ளார். வா.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில், **"தனது கணவர் ஐயப்பனுக்கும் சுடலி என்ற பெண்ணுக்கும் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது என்றால் சரிதான் என்றும்; தனது கணவருக்கும் சுடலிக்கும் எந்த குழந்தையும் கிடையாது என்றால் சரிதான் என்றும்; சுடலி உயிருடன் இருக்கும்போதுதான் தன்னை தனது கணவர் திருமணம் செய்தார் என்றால் சரிதான் என்றும்; தனக்கும் தனது கணவருக்கும் 2 முதல் 4 வாதிகள் தான் வாரிசு என்றால் சரிதான் என்றும்; தனது கணவருக்கு 2 முதல் 4 வாதிகள் வாரிசு என்றும் மேலும் தனது கணவரின் பெற்றோர்களும் வாரிசுகள் என்றால் சரிதான் ஆனால் தனது கணவரின் பெற்றோர்கள் தற்போது உயிருடன் இல்லை என்றும்; தனது கணவரின் முதல் மனைவி கடந்த 2022–ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான் என்றும்; தனது கணவர் கடந்த 2023–ம் ஆண்டு இறந்தார் என்றால் சரிதான் என்றும்; தனது கணவருக்கு இரண்டு மனைவிகள் என்பதால்தான் வாரிசு சான்றிதழ் வழங்க மறுத்துவிட்டார்கள் என்றால் சரிதான்"** என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**v)** இருதரப்பு வாதங்களும், வாய்மொழிச் சாட்சியங்களும் மற்றும் வழக்கிலுள்ள சான்றாவணங்களும் நன்கு பரிசீலனை செய்கையில், முதலாவதாக லேட். ஐயப்பனின் இறப்பு குறித்து வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 (இறப்புச் சான்றிதழ்) மூலம் அவர் கடந்த 03.10.2023 அன்று இறந்துள்ளார் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்படுகிறது. மேலும், வாதிகள் தரப்பில் தங்களது வழக்குரையில் முதல் மனைவி சுடலி கடந்த 31.07.2022 அன்று இறந்ததாகக் குறிப்பிடும் அதே வேளையில், 1–ம் வாதியுடனான திருமணம் 24 வருடங்களுக்கு முன்பு நடந்துவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர். வாதிகளின் இந்த கூற்றினை வா.சா.1–ன் வாய்மொழி குறுக்கு விசாரணைச் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.5 (முதல் மனைவி சுடலியின் இறப்புச் சான்றிதழ்) ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 1–ம் வாதியின் இத்திருமணம் லேட். ஐயப்பனின் முதல் மனைவி சுடலி உயிருடன் இருக்கும்போதே நடந்துள்ளது என்பது வாதிகளின் வழக்குரை மூலமாகவும், வாய்மொழி ஒப்புதல் மூலமாகவும் ஆவணப்பூர்வமாகத் தெளிவாக மெய்ப்பிக்கப்படுகிறது. இந்து திருமணச் சட்டம் 1955, பிரிவு 5(i)–ன் படி, முந்தைய திருமண பந்தம் அமலில் இருக்கும்போது நடக்கும் இரண்டாவது திருமணம் சட்டப்படி செல்லாதது (Void Marriage) ஆகும். எனவே, வாதிகள் தரப்பில் 1–ம் வாதியையும் சேர்த்து வாரிசுச் சான்றிதழ் கோரினாலும், 1–ம் வாதிக்கு லேட். ஐயப்பனின் சட்டப்பூர்வமான மனைவி என்ற அந்தஸ்து கிடைக்கப் பெறாது என்பதால், அவர் லேட். ஐயப்பனின் சட்டப்படியான வாரிசு ஆக முடியாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**vi)** இருப்பினும், இந்து திருமணச் சட்டம் 1955, பிரிவு 16–ன் கீழ் உள்ள சட்டப்படியான விதிவிலக்கின்படி (Statutory Legitimacy), பெற்றோர்களின் திருமணம் செல்லாததாக இருந்தாலும், அத்திருமணத்தின் மூலம் பிறந்த பிள்ளைகள் சட்டப்பூர்வமான வாரிசுகளாகவே கருதப்படுவார்கள். மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு தீர்ப்புகளின்படியும், செல்லாத

திருமணத்தின் மூலம் பிறந்த பிள்ளைகளுக்குத் தங்களின் தந்தையின் சுயார்ஜிதச் சொத்துக்களில் வாரிசுரிமை கோர முழு அதிகாரம் உண்டு. வாதிகள் தங்களின் அடையாளத்தை மெய்ப்பிக்கத் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 (ஆதார் அட்டைகளின் நகல்கள்) மற்றும் வா.சா.ஆ.4 (குடும்ப அட்டை நகல்) ஆகிய ஆவணங்கள் மூலம் வாதிகள் 2 முதல் 4 ஆகிய நபர்கள் லேட். ஐயப்பனின் பிள்ளைகள் என்பது தெளிவாகிறது. எனவே, லேட். ஐயப்பனின் பிள்ளைகளான வாதிகள் 2 முதல் 4 ஆகியோரே அவரின் சட்டப்படியான உண்மையான வாரிசுகள் ஆவர் என்பது ஆவணப்பூர்வமாக மெய்ப்பிக்கப்படுகிறது.

**vii)** பிரதிவாதிகள் தரப்பில் வாதிகள் வழக்கை ஆட்சேபித்தாலும், ஒரு நபரின் வாரிசுரிமை குறித்த சட்டப்பூர்வ அந்தஸ்தை விளம்புகை செய்ய உரிமையியல் நீதிமன்றத்திற்கு முழு அதிகாரம் உண்டு என இந்நீதிமன்றம் கருதுகிறது. 1-ம் வாதி வாரிசு சான்றிதழ் கோரி தாக்கல் செய்த மனு, 1-ம் பிரதிவாதி வட்டாட்சியர் அலுவலகத்தால் கடந்த 16.11.2024 அன்று இரண்டு மனைவிகள் என்ற காரணத்தைக் காட்டி நிராகரிக்கப்பட்டது வாதிகள் தரப்பு வா.சா.ஆ.2 (மேலெழுத்துக் கடித நகல்) மூலம் தெளிவாகிறது. வாரிசுகளின் இந்த பட்டியலைத் தவறு என நிரூபிக்கவோ அல்லது இவர்களைத் தவிர வேறு வாரிசுகள் தற்போது உயிருடன் உள்ளனர் என்பதைக் காட்டவோ பிரதிவாதிகள் தரப்பில் எந்தவிதமான சாட்சிய சான்றாவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, கடந்த 03.10.2023 அன்று காலமான ஐயப்பன் என்பவருக்கு, அவரது பிள்ளைகளான வாதிகள் 2 முதல் 4 ஆகியோரே சட்டப்பூர்வமான வாரிசுகள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** இவ்வழக்கானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு, கடந்த 03.10.2023-ம் தேதியன்று இறந்துபோன ஐயப்பன் என்பவருக்கு இவ்வழக்கு வாதிகள் 2 முதல் 4 வரை உள்ள நபர்கள் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை செய்தும், அதன் அடிப்படையில் அவர்களுக்கு வாரிசுச் சான்றிதழ்

வழங்கிட 1–ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கியும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, **2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06ம் நாளான இன்று** இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

GURU Digitally signed by GURU Date: 2026.06.06 15:18:29 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**செங்கோட்டை**

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u> :–**

வா.சா.1 .. திருமதி. சுப்புலெட்சுமி (1ம் வாதி)

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> :–**

| ஆவண எண். | நாள் | சான்றாவணங்கள் |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 03.10.2023 | லேட்.ஐயப்பன் என்பவரின் இறப்பு சான்றின் நகல். |
| வா.சா.ஆ.2 | 16.11.2024 | மேலெழுத்து கடிதத்தின் நகல். |
| வா.சா.ஆ.3 | –– | வாதிகளின் ஆதார் அடையாள அட்டை<br>(அசலுடன் ஒப்பிடப்பட்ட ஒளிப்பட நகல்) |
| வா.சா.ஆ.4 | –– | வாதிகளின் குடும்ப அட்டை<br>(அசலுடன் ஒப்பிடப்பட்ட ஒளிப்பட நகல்) |
| வா.சா.ஆ.5 | 31.07.2022 | லேட்.சுடலி என்பவரின் இறப்பு சான்றின் நகல். |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :–**

– இல்லை –

GURU Digitally signed by GURU Date: 2026.06.06 15:18:39 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**செங்கோட்டை**

<u>மா.உ.நீதிமன்றம், செங்கோட்டை</u>
அசல் வழக்கு எண்.20/2025
**தீர்ப்புரை** (Draft / Fair)
நாள் : 06.06.2026